பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

மலர் 19 ஆனி 16 நளஜப் 12 இதழ் 139

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 30-6-77

## றேகண விஜயவீர உட்பட 112 இளைஞர்களும் உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர்

### அமைச்சின் செயலாளர் சந்திப்பு நான்கு மணித்தியாலங்கள் நீடித்தது

கொழும்பு, புதன்

சிறையிலிருக்கும் ஜாதிக விமுக்தி பெரமுனைத் தலைவர் திரு. றோஹண விஜயவீரா உட்பட 112 இளைஞர்களும் இன்று தமது சாகும்வரை உண்ணாவிரதத்தை கைவிட்டனர்.

வெலிக்கடைமகளின் சிறைச்சாலையிலிருக்கும் இவர்கள் கடந்தவெள்ளிக்கிழமை சாகும் வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர்.

நீதியமைச்சின் செயலாளர் திரு. நிஹால் ஜெயவிக்கிரம இவர்களை கடந்த இரவு வெலிக்கடைச் சிறைச்சாலையில் சந்தித்துப் பேசியதையடுத்து உண்ணாவிரதம் கைவிடப்பட்டது.

அமைச்சின் செயலாளர் கடந்த இரவு 11 மணியில் இருந்து இன்று அதிகாலை 3 மணிவரை இவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்

சிறைச்சாலை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்த திரு. விஜயவீராவும் மற்றும் எழுவரும் செயலாளரிடம் கூட்டிவரப்பட்டிருந்தனர்.

சிறைச்சாலைச் சுப்பிரிண்டனை மாற்றவேண்டுமெனறும் வெலிக்கடை மகளின் சிறைச்சாலையிலிருந்து வேறு சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட தமது சக கைதிகள் எண்மரை மீண்டும் இதே சிறைச்சாலைக்கு கொண்டுவரவேண்டும் என்றும் இவர்கள் கோரிக்கை விடுத்து உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருந்தனர்.

சிறைச்சாலை சுப்பிரிண்டனை இடமாற்றம்செய்யும் கோரிக்கையை ஏற்கமுடியாதெனக் கூறிய செயலாளர், குறிப்பிட்ட கைதிகள் எண்மரையும் மீண்டும் இதே சிறைச்சாலைக்கு கொண்டுவரவேண்டும் என்ற கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

இருதினங்களுக்கு ஒருதடவை சிறைச்சாலைகமிஷனர் அல்லது அவரது உதவியாளர் சிறைச்சாலைக்கு வந்து நிலைமையை அவதானிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இக்கைதிகள் சிறையில் தப்பிக்க முயற்சிநடக்கிறது என்று சி. ஐ. டி.யினர் மூலம் தமக்கு தகவல் கிடைத்ததாகவும் சிறைச்சாலை மேற்பகுதியில் இருந்து ஏணி, இரும்புக்கம்பி, முதலானவை கண்டெடுக்கப்பட்டதாகவும் சிறைச்சாலை தரப்பில் செயலாளரிடம் தெரிவிக்கப்பட்டது.

இக்கூற்றை பிரஸ்தாப கைதிகள் மறுத்தனர்.

மேற்படி சாகும்வரை உண்ணாவிரத விவகாரத்தில் தலையிடுமாறு ஜாதிக விமுக்தி பலவேகய தலைவர் திரு. பிரின்ஸ் குணசேகராவும், வர்த்தகஊழியர் சங்க தலைவர் திரு. பாலா தம்புவும் வலியுறுத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-உ)

# புதுச்சேரியில் கலப்பு அரசு?

## காங்கிரஸ் ஆதரவுடன் அஇதிமு கழகம் அமைக்கும்

சென்னை, ஜூன் 29

**தமிழ்நாட்டில்நாளை வியாழக்கிழமை ஆட்சி அமைக்கப்போகும் அ. இ. அ. தி. மு. கழகம், புதுச்(பாண்டிச்)சேரியில் பெரும்பான்மை பலத்துடன் அரசாங்கத்தை நிறுவத் தவறிவிட்டது. காங்கிரஸ் கட்சியின் ஆதரவுடன் கலப்பு அரசாங்கத்தைப் புதுச்சேரியில் எம். ஜி. ஆர். கட்சி அமைக்கும் என்று அ. இ. அ. தி. மு. கழகத்துடன் நெருங்கிய வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.**

தமிழகத்தில் நாளைக்காலை, சென்னையிலுள்ள ராஜாஜி மண்டபத்தில் பதவியேற்கப் போகும் அ. இ. அ. தி. மு. கழகம் பாண்டிச்சேரியில் மற்றைய கட்சிகளைவிடப் பெரும்பான்மைப் பலம் பெற்றிருந்த போதிலும் ஆட்சிஅமைப்பதில் சிக்கல் ஏற்பட்டுவிட்டது. பாண்டிச்சேரி சட்டசபையின் மொத்த அங்கத்தவர்கள் தொகை முப்பதுஆகும் இதில் முடிந்த சட்டசபைத்தேர்தலில் அ. இ. அ. தி. மு கழகம் 14 தொகுதிகளையும் ஜனதா 09 தொகுதிகளையும் தி. மு. கழகம் 03 தொகுதிகளையும் காங்கிரஸ் 02 தொகுதிகளையும் சுயேச்சை 02 தொகுதிகளையும் கைப்பற்றியிருந்தன. பெரும்பான்மைப்பலம்பெற்றஎம். ஜி ஆர். கட்சி ஆட்சிஅமைக்க முயற்சிகள் மேற்கொண்ட போது, இக்கட்சியிலிருந்து இரண்டுபேர் வெளியேறினர். இதன்மூலம், அ. இ. அ. தி. மு. கழக சார்பில் 13 பேரின் ஆதரவையே காட்டமுடிந்தது.

மக்களின் ஆதரவுடன் அரசு அமைக்கவேண்டும், இதற்கு வேண்டுமானால், மேற்கொண்டு அவகாசம் அளிக்க முடியும் என்று லெப்டினன்ட் கவர்னர் குல்கர்ணி தெரிவித்திருந்தார்.

சிறுபான்மைப் பலத்துடன் அரசுஅமைக்க சந்தர்ப்பமளிக்குமாறு அ. இ. அ. தி. மு. கழக சட்டசபைத் தலைவர் திரு. இராமசாமி விடுத்த வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இதனைத் தொடர்ந்து பாண்டிச்சேரியில் மற்றுமொரு கட்சியின் ஆதரவுடன் கலப்பு அரசாங்கத்தை அமைக்க அ. இ. அ. தி. மு. கழகம் முயற்சி எடுத்துள்ளது. அ. இ. அ. தி மு.க.கழகத்தின் தொகை பதின்மூன்றுககுறைதுள்ளது. சட்டசபையில் சரிபாதிக்கும் (15)குறைவான உறுப்பினர்களை இக்கட்சி கொண்டிருந்ததால் ஆட்சியை அமைப்பதில் சிக்கல் ஏற்பட்டது,

பாண்டிச்சேரி லெப்டினன்ட் கவர்னர் குல்கர்ணி, பாண்டிச்சேரியில் ஆட்சி அமைக்க, நேற்று செவ்வாய்க்கிழமை வரைஅ.இஅ தி மு.க கழகசட்டசபைத் தலைவர் திரு. இராமசாமிக்கு அவகாசம் அளித்து இருந்தார்.

அவகாசம் கொடுப்பதற்கிணங்க பெரும்பான்மை பலத்தைக் காட்ட அ.இ.அ தி மு. கழகம் நேற்று தவறி விட்டது.மந்திரி சபை அமைக்க பதினறு பேரின் ஆதரவு இருக்க வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது இதற்குஒருவாரகாலம் அவகாசம் தருமாறும் பாண்டிச்சேரி லெப்டினனட் கவர்னரை திரு. இராமசாமி கேட்டிருக்கிறுர். இவரதுகோரிக்கை ஏற்றுக் கொள்ளப் பட்டதாக பாண்டிச்சேரியிலிருந்து வெளிவந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

புதுச்சேரியில் அ. இ. அ. தி. மு. க. ஆட்சியமைப்பதற்கு தமது கட்சியின் ஒத்துழைப் பைக்கேட்டால் ஒத்துழைப்பு அளிக்கத்தாம்தயாராகஇருப்பதாக புதுச்சேரி-தமிழ்நாட்டுக்கான அகில இந்திய காங்கிரஸ் [illegible] திரு. கிருஷ்ணப்பா கூறியுள்ளார் என்று கடைசியாகக் கிடைத்த தகவல் ஒன்று கூறுகிறது. அ. இ. அ. தி. மு. க. தமது கட்சியின ஆதரவை நாடும்போது எவ்விதத்தில் ஆதரவு வழங்குவது என்பது பற்றி முடிவுசெய்யப்படும் என்றும் அவர் கூறினர்.

இன்று சென்னையில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அ. இ. அ. தி. மு. க. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவையும் நாடுமா என்பது குறித்துத் தாம் கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் திரு. கல்யாண சுந்தரத்துடன் பேசமுயற்சிப்பதாகவும் திரு. கிருஷ்ணப்பா சொன்னர்.

புதுச்சேரியில் காங்கிரஸ் கட்சிக்கு இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறர்கள்.

இன்று சென்னையில் நடைபெற்ற கட்சியின்கமிட்டிக்கூட்டத்தில் சட்ட மன்றத் தலைவராக திரு. ஏ. ஆர். மாரிமுத்து தேர்ந்தெடுக்கப்பட்டார். (உ)

## 7 வயதுச் சிறுமியிடம் திருடன் கைவரிசை!

சுன்னுகம், புதன்

கல்லூரியில் இருந்த சிறுமி ஒருவரைச் சைக்கிளில் அழைத்துச் சென்ற இனம் தெரியாத நபர் ஒருவர் அச்சிறுமியின் தங்க மோதிரத்தைத் திருடிய சம்பவம் ஒன்று நேற்று முன் தினம் சுன்னுகத்தில் நடைபெற்றுள்ளது.

சுன்னுகத்திலுள்ள கல்லூரி ஒன்றில் மதியவேளையில் விடுசெல்லக் காத்திருந்த இராமலிங்கம் ஜெயகௌரி என்ற 7 வயதுச் சிறுமி தந்தையின் வரவுக்காகக் காத்திருந்த சமயம் இனம் தெரியாத நபர் ஒருவர் அச்சிறுமியிடம் வந்து சிறுமியின் தாய் தந்தையர் கடும் சுகவீனம் அடைந்து மானிப்பாய் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவரது தந்தையார் அவரை அழைத்து வரும்படி தம்மிடம் கூறி அனுப்பியதாகவும் கூறிச் சிறுமியை அழைத்துச்சென்றுராம்.

அந்த நபருடன்சிறுமி புறப்பட்டுச்சென்றுர் எனினும் சைக்கிள் பாதைமாறிச் செல்வதை அறிந்த அதுபற்றி வினவியபோது அவர் சத்தம் போட்டால் கொன்றுவிடுவேன் என்று கூறிப் பயமுறுத்தியதாகவும் பின்னர் வழியில் வைத்துச் சிறுமியின் கையில் இருந்ததங்க மோதிரத்தைக் கழற்றியபோது சிறுமி சத்தமிட சிறுமியை விட்டுவிட்டு மோதிரத்துடன் ஓடிவிட்டதாகவும் தெரியவருகிறது. சிறுமியின் அவல நிலையையும் அழுகுரலையும் கண்டு அயலில் உள்ளவர்கள் பெற்றோரிடம் சிறுமியை ஒப்படைத்ததாகத் தெரியவருகிறது. (அ)

## "தமிழ் ஈழக்கோரிக்கையை உலகறியச் செய்வோம்"

—வ. ந. நவரத்தினம்

மட்டுவில், புதன்

"பாராளுமன்றம் எமது சுதந்திர தமிழ் ஈழக்கோரிக்கையை அகில உலகமும் அறிந்துகொள்ளவைக்க வாய்ப்பளிக்கும் ஒரு கருவியே தவிர, பாராளுமன்றம் போய் பிரேரணைகளைப் போட்டதும், சுதந்திர தமிழ் ஈழம் கிடைத்துவிடாது."

சாவகச்சேரி முன்னுள் எம். பி. யும், தமிழர் விடுதலைக் கூட்டணிவேட்பாளருமான திரு. வ. ந. நவரத்தினம் தனங்கிழப்பு மணல்காட்டில் நடந்த தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் மேற்கண்டவாறு கூறினர்.

இளைப்பாறிய ஆசிரியர் திரு. [illegible] தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. நவரத்தினம் தொடர்ந்து கூறியதாவது:

"தமிழினம் தமது சுதந்திர தமிழ் ஈழத்தை உதயமாக்குவதையே தமது இலட்சியமாகக்கொண்டுள்ளது என்று மூதறிஞர் செல்வா ஆட்சிமன்றத்தில் கூறியிருந்தார்.

"தந்தைசெல்வா,ராஜினமா செய்துவிட்டு, தமிழ்ஈழ இலட்சியத்தை முன்வைத்து இடைத்தேர்தலில் போட்டியிட்டு

(6-ம் பக்கம் பார்க்க]

## மின்சார சபையின் புதிய தலைவர்

கொழும்பு, புதன்

இலங்கை மின்சார சபையின் புதிய தலைவராக திரு. டபிள்யு பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்

இன்று அவர் தமது பதவியைப் பொறுப்பேற்றுர்.

கட்டுப்பெத்தவளாக பொறியியல் கட்டடத்துறைத் தலைவராக இவர் இதுவரை பணியாற்றிவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-உ)

யாழ். மாவட்ட

# வாக்காளர் வசதிக்காக மேலதிக பஸ் சேவைகள்

யாழ்ப்பாணம், வியாழன்

பொதுத்தேர்தல் தினத்தன்று, வாக்காளர்களின் வசதிக்காகப் புதிய பாதைகளில் மேலதிக பஸ் சேவைகளை ஒழுங்குசெய்வதென நேற்று யாழ்ப்பாணம் கச்சேரியில் நடந்த மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திரு.டபிள்யூ. ஏ. எல். விஜயபாலா கூட்டிய இம்மகாநாட்டில் அபேட்சகர்களும் பொலிஸ் அதிபர் திரு. ஏ எஸ். செனிவிரத்தினவும், இ. போ. ச. உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

பஸ் சேவைகளை ஒழுங்கு செய்வதுபற்றித் தொகுதி ரீதியாக ஆலோசனைசெய்யப்பட்டு முடிவு எடுக்கப்பட்டது.

பஸ் சேவைகள்நடைபெறுத பாதைகளில் தேர்தல் தினத்தன்று பஸ் சேவை நடத்தவும் மேலதிக பஸ் சேவை ஒழுங்கு செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

தேர்தல் தினத்தன்று வாக்காளரின் வசதி கருதி சிரான பஸ் சேவையை நடாத்தப் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக இ. போ. ச. உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

(க-அ)

### மணிவாக்கு

ஒருமனிதனை அவன் விளங்கிக்கொள்ளாத ஒரு காரியத்தைச் செய்யும்படி வலியுறுத்தல் அவனை மிக மிகக் கடும் தண்டனைக்குட்படுத்துவதுபோலாகும்.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு
THE EELANAADU

## மலையக மக்களும் குடியுரிமையும்

இலங்கை குடியுரிமை வழங்கப்படுவதற்காகத் தெரிவு செய்யப்பட்ட இந்திய வம்சாவழியினரான பலர் அதை ஏற்றுக்கொள்ள மறுத்து இந்தியாவுக்கே திரும்பிவிட விரும்புகிருர்களாம்.

குடியுரிமைக்கு மனுச் செய்து அவை ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில், சத்தியப் பிரமாணம் எடுப்பதில் பலர் தயக்கம் காட்டுவதாகவும், இன்னும் சிலர் ஏற்கனவே தாம் இந்திய பிரஜைகளாகப் பதிந்துகொண்டுவிட்டதாக அதிகாரிகளுக்கு அறிவித்து வருகிருர்களென்றும் ஒருசெய்தி கூறுகின்றது.

1964-ம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின்படி இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினரில் 325,000 பேரை இலங்கைப் பிரஜைகளாக ஏற்றுக்கொள்வதென்றும், 525,000 பேரை இந்தியா திருப்பி அழைத்துக் கொள்வதென்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது. எஞ்சியவர்கள்பற்றி பின்னெரு சமயம்இருதரப்பினரும் கூடி பேசி முடிவெடுப்பதென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஆனல் இலங்கை குடியுரிமை கோரி 600,000 பேருக்குமேல் விண்ணப்பம் செய்தார்கள். இந்திய குடியுரிமைக்கு ஏறத்தாழ 400,000 பேரே விண்ணப்பித்ததாகக் கூறப்பட்டது. இலங்கை குடியுரிமை கோருவதில் மிகுந்த அக்கறையும் ஆர்வமும் காட்டிய அதேமக்கள் இப்பொழுது அந்த உரிமை வேண்டாம் என்று மறுத்துவருகிருர்கள் எனபது விசித்திரமாகவிருக்கிறது.

ஏற்கனவே இந்தியா திரும்பியுள்ளவர்கள் தங்களின் சுபீட்சமான நிலைமை குறித்து இங்குள்ள தமது நண்பர்கள். உறவினர்களுக்கு அனுப்பும் செய்திகள் மேற்கூறிய நிலைமைக்குக் காரணமாய் இருக்கும்என்று கூறப்படுவது அவ்வளவு பொருத்தமானதாகத் தோன்றவில்லை.

இந்தியாவுக்குத் திரும்பிய அனைவருமே வசதியாகவும், திருப்தியாகவும் வாழ்கிருர்களா என்பது வேறுவிடயம். பலஆண்டுகாலம் இந்தநாட்டில் வாழ்ந்து பழகிப்போன அவர்கள் புதிய சூழ்நிலையில் தம் வாழ்வை உடனடியாகவே திருப்திகாமாக அமைத்துக்கொண்டு விடுவது சாத்தியமல்ல. இவர்களில் பெரும்பாலானவர்கள் தோட்டத்தொழிலாளர்களான ஏழைமக்கள். இவர்கள் கொண்டு செல்லும் பணமும் பொருளும் சொற்பகாலத்திலேயே செலவாகிப்போய்விடும். இந்திய அரசின் ஆதரவிலேயே இவர்கள் தம் வாழ்வைப் புனர் அமைத்துக் கொள்ள நேர்கின்றது. மேலும் தமிழ் நாட்டைவிடுத்து தூரத்திலுள்ள வேற்று மாநிலங்களிலும் சென்று குடியேறவேண்டிய சூழ்நிலையும் இருந்துவருகின்றது. இவ்வாறு வேற்று மாநிலங்களுக்குச் சென்று குடியேற இங்கிருந்துசென்ற தமிழர்களான இந்திய வம்சாவழியினர் மறுத்து ஆட்சேபம் தெரிவித்தது பற்றிய செய்திகளும் சமீப காலத்தில் வெளியாகியிருந்தன.

இந்தப் பின்னணியில் பார்க்கும் போது இலங்கை குடியுரிமை பெற்றவர்கள் அதனைக் கைவிட்டு இந்தியாவுக்குத் திரும்ப எண்ணுவதற்கு வேறுகாரணங்களும் இருக்க வேண்டும் என்று கருதமுடியும்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் இந்த நாட்டிலேயே பிறந்து வளர்ந்து வேற்றுமண்ணை மிதித்தறியாதவர்கள். தேயிலை, றப்பர் தோட்டங்களும், அவைகளைச் சுற்றியுள்ள பிரதேசங்களுமே அவர்களுக்கு பரிச்சியமான இடங்கள். இப் பகுதிகளில் அவர்கள் காலாகாலமாக பல்வேறு பொருளாதார இன்னல்களுக்கிடையில் சுதந்திரமாகவும் ஏனைய மக்களுடன் சகோதர பாசத்தோடும் ஒன்றிணைந்து வாழ்ந்து வந்திருக்கிருர்கள்.

இந்த நிலைமையில் அண்மைக் காலமாக பெரும் மாற்றங்கள் நிகழ்ந்து வருவது தெரிந்ததே. குறிப்பாக மலையகத் தோட்டங்கள் அரசுடைமையாக்கப்பட்டு, அவைகளில் பல தோட்டங்கள் கிராமப்புற விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றன.

பழைய காலனித்துவ அமைப்பு முறையிலிருந்து நாடுவிடுபட்டு புதிய சோஷலிஸ இலக்கை நோக்கி நடைபோட எத்தனிக்கும் போது இம்மாதிரி மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை தாம் வரவேற்க வேண்டியவையும்கூட, ஆனல்...!

இவை அப்பிரதேசத்தில் நிரந்தரமாகக் குடியிருக்கும் இலங்கைப் பிரஜைகளான அந்த மக்களையும் அரவணைத்துக் கொண்டு போபவைகளாக இருக்கவேண்டும் இந்த நாட்டின் பிரஜைகளாக உண்மையாகவே தாம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிருர்கள் என்பதை அவர்களுக்கு இது உணர்த்துவதாகவும் ஏனைய பிரஜைகளைப் போன்றே அவர்களும் நடத்தப்படுவார்கள் என்ற வாக்குறுதி நிறைவேற்றப்படுவதாகவும் இருக்கும்.

சமீபத்தில் மலையகத்தில் சில பகுதிகளில் நிகழ்ந்துள்ள சம்பவங்கள் இந்தச் சூழ்நிலை உருவாவதற்கு எந்தவகையிலும் உதவுபவையாக அமையவில்லை. மாருக அம்மக்கள் மத்தியில் அவநம்பிக்கையும், விரக்தியும், ஏக்கமும் வளர்ந்துள்ளன.

பெரும்பான்மை மக்கள்மத்தியில் வாழும் சிறுபான்மை இனத்தவர்களான இம்மக்கள் அச்சமின்றியும் சுதந்திரமாகவும் ஒன்றிணைந்து வாழ்வதற்கான சூழ்நிலையைத் தோற்றுவிக்க வேண்டியது அதிகாரப் பொறுப்பிலிருப்பவர்களின் கடமை.

---

எம். பி. யாவது எப்படி?

## நியமன பத்திரமும் ஆட்சேபனைகளும்

### கட்டுப்பணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு இல்லாவிட்டால் நியமனப்பத்திரம் ஏற்கப்படுமா?

பற்றுச்சீட்டு இல்லாவிட்டால் நியமனப்பத்திரம் நிராகரிக்கப்படவேண்டும் என்ற சட்ட ஏற்பாடு எங்குமே இல்லை. அதுமட்டுமல்லாமல், கட்டுப்பணத்தைச் செலுத்திய பின்னர்தான் நியமனப்பத்திரத்தைச் சமர்ப்பிக்கலாம் என்ற ஏற்பாடும் இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்கள் அரசப் பேரவைக் கட்டளையில் இல்லை. நியமனப் பத்திரத்தைச் சமர்ப்பித்தபின்னர் கட்டுப்பணத்தைச் செலுத்தலாம் என்று 29(1) ஆம் பிரிவு கூறுகின்றது. நியமனத் தேதியன்று பிற்பகல் 1 மணிவரை கட்டுப்பணம் செலுத்தலாம் என்று இப்பிரிவு கூறுகின்றது. நியமனத்தேதியன்று காலை 11 மணிக்குப் பின்னர் நியமனப்பத்திரம் எதுவும் சமர்ப்பிக்க முடியாது.

எனவேபதினெரு மணியானதும் "இனிமேல் நியமனப்பத்திரம் எதுவும் என்னல் ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது" என்று தேர்தற் பொறுப்புத்தியோகத்தர் கூறுவார். நியமனப்பத்திரம் ஒவ்வொன்றும் ஒரு பிரதியுடன் சேர்ந்திருக்க வேண்டும் என்று முன்னரும் பல இடத்தில் கூறியுள்ளோம். நியமனப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டவுடனும் தேர்தற் பொறுப்புத்தியோகத்தர் அதன் பிரதியை வெளியே துலாம்பரமானவோரிடத்தில் ஒட்டிவிடுதல் வேண்டும்.

### நியமனத்தேதி அன்று 11 மணிக்குப் பின்னர் நடைபெற வேண்டியவை

ஏலவே சமர்ப்பிக்கப்பட்ட நியமனப்பத்திரங்கள் தொடர்பில் ஆட்சேபனைகள் தெரிவிக்க விரும்பினல், நியமன நாளன்று காலை 10 மணிக்கும் பதினென்றரை மணிக்குமிடையில் தெரிவிக்கலாம் என்று 30 ஆம் பிரிவின் (4)ஆம் உட்பிரிவு கூறுகின்றது. 31 ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவும் இதையே வேறுவிதமாகக் கூறுகின்றது.

### சட்டமும் சமுதாயமும்

### யார்யார் ஆட்சேபனை தெரிவிக்கமுடியும்?

வேட்பாளர்கள், முன்மொழிபவர்கள், வழிமொழிபவர்கள், வேட்பாளர் ஒவ்வொருவராலும் தேர்ந்தெடுக்கப்படும் "மற்றும் ஓர் ஆள்" ஆகியோர், ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமனப்பத்திரங்களைப் பரிசீலித்துப் பார்த்து ஆட்சேபனை தெரிவிக்கமுடியும்.

இவர்கள் மட்டுமல்லாமல் தேர்தற் பொறுப்புத்தியோகத்தரும் ஆட்சேபனை தெரிவிக்க முடியும் என்று 31ம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவு கூறுகின்றது.

### எத்தகைய ஏதுக்களை முன்வைத்து ஆட்சேபிக்கலாம்?

இதற்கு மறுமொழி 31-ஆம் பிரிவில்இருக்கின்றது. பின்வருவனவற்றுள்ஏதேனும் ஒன்றை ஏதுவாக வைத்து ஆட்சேபிக்க முடியும்:-

(அ) வேட்பாளர் பற்றிய விவரணம், வேட்பாளரை இனங்கண்டு கொள்வதற்குப் போதுமானதாக இல்லை என்ற ஏது;

(ஆ) நியமனப் பத்திரம் இலங்கைப் பாராளுமன்ற தேர்தல்கள் அரசப் பேரவைக் கட்டளையின் ஏற்பாடுகளுக்கு இணங்க அமையவில்லை. அல்லது அதுமேற்படி ஏற்பாடுகளுக்கு இணங்க ஒப்படைக்கப்படவில்லை என்ற ஏது:

### ஆட்சேபனையைஎப்படித் தெரிவிப்பது?

வாய்மூல ஆட்சேபனை ஆட்சேபனையாகக் கொள்ளப்படமாட்டாது. ஆட்சேபனையானது எழுத்தில் இருத்தல்வேண்டும் என்பதோடு ஆட்சேபிப்பவரால் ஒப்பமிடப்படுதலும் வேண்டும்.

— செ.சிறீக்கந்தராசா —
(சட்டத்தரணி

வெறுமனே, குறிப்பிட்ட ஒரு வேட்பாளரின் நியமனத்தை ஆட்சேபிப்பதாக எழுத்தில் கூறி ஒப்பமிட்டால் மட்டும் போதாது. ஆட்சேபனைக்கான காரணத்தை எடுத்துக் கூறுதலும் அவசியம்(பிரிவு 31 (3)

(இ) நியமனப்பத்திரத்தின் உள்ளடக்கங்களைப் பார்க்கும் போதே அந்த வேட்பாளர் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட முடியாதவர் என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது என்ற ஏது;

(ஈ) ஊழற்பழக்கத்துக்காக அல்லது சட்டவிரோதப் பழக்கத்துக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டார் என்பதால் அல்லது பாராளுமன்றத்துக்கு உறுப்பினர்களைத்தேர்ந்தெடுத்தல்பற்றியதும் அப்போதைக்கு நடைமுறையிலிருப்பதுமான சட்டத்துக்கிணங்க தேர்தல் நீதிபதியால் முறைப்பாடு செய்யப்பட்டு அறிக்கை செய்யப்பட்டார் என்பதால் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படமுடியாதவராக உள்ளார் என்ற ஏது?

### தெரிவிக்கப்படும் ஆட்சேபனையை தேர்தற்பொறுப்பு உத்தியோகத்தர் எவ்வாறு கையாளுதல் வேண்டும்?

மேற்கூறியவற்றுள் எவற்றையும் அல்லது எல்லாவற்றையும் ஏதுவாக வைத்து ஆட்சேபனை தெரிவிக்கப்படின் தேர்தற் பொறுப்புத்தியோகத்தர் காலம் தாழ்த்தாமல், அத்தகைய ஆட்சேபனை செல்லுபடியானதா அல்லவா என்பதைத் தீர்மானித்தல் வேண்டும். ஆனல் மேற்கூறிய (ஈ) என்னும் ஏதுவைக் காரணமாக வைத்து ஆட்சேபனை தெரிவிக்கப்படின், தேர்தற்பொறுப்புத்தியோகத்தர் அந்த ஆட்சேபனை மீதான முடிவைப் பின்போடுதல் வேண்டும். கிளப்பப்பட்ட ஆட்சேபனையை நிராகரித்தாலும்சரி, ஏற்றுக் கொண்டாலும்சரி, நிராகரிப்புக்கான அல்லது ஏற்றுக்கோடலுக்கான காரணத்தை அவர் வெளிப்படையாகக் கூறுதல் வேண்டும்.

ஏதேனும் ஏதுவை அடிப்படையாக வைத்துச் செய்யப்பட்ட ஆட்சேபனையை தேர்தற்பொறுப்பு உத்தியோகத்தர் நிராகரித்தால், அந்த நிராகரிப்பு, முற்றும் இறுதியுமானதாகும். இதற்கெதிராக மேன்முறையீடு செய்யமுடியாது. ஆனல் அத்தகைய ஆட்சேபனை ஏற்கப்படுமாயின் ஏற்பதாகிய அவருடைய முடிவு தேர்தல் ஆட்சேபனை மனுவின் போது தள்ளுபடி செய்யப்படலாம்.

மேலே [ஈ] என்னும் பந்தியின் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் ஏதுவை முன்வைத்துச் செய்யப்படும் ஆட்சேபனை உயர்நீதிமன்றத்துக்கு ஆற்றுப்படுத்தப்படும். இந்த ஆட்சேபனையை உயர்நீதிமன்றம்தான் தீர்மானித்தல் வேண்டும்.

(தொடரும்)

---

## ஐயாறன் எழுதுவது

கரவெட்டி தச்சன்தோப்பு சிந்தாமணிப்பிள்ளையார் மீது கரவை கே. கணபதிப்பிள்ளை பாடியுள்ள "தச்சைச்சிலேடை வெண்பா" எனும் அருமையான நூலுக்கு பண்டிதமணி அவர்கள் ஒரு சிறந்த அணிந்துரை எழுதியுள்ளார்கள்

"நூலும் உரையும் ஜனநாயக உலகை மறக்கச்செய்து "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு" என்ற தொல்காப்பியத்தை நினைவு படுத்தி, பழைய தமிழ்உலகில்சஞ்சரிக்க வைப்பது பாராட்டியமையாது.

"கரவையில் தோன்றி வளர்கின்ற சகோதரமுறைபூண்ட இருவர் இந்நிகழ்காலத்தில் நம் கண்காண இந்நூலையும் உரையையும் உதவிஇருப்பதுபழைய யாழ்ப்பாணம் இன்னும் உயிர் வாழ்கின்றதே என்ற வியப்புக்குரியதாய் இறுமாப்பை உண்டாக்குகிறது" என்று சொல்லி,

நூலாசிரியர் திரு. க. கணபதிப்பிள்ளை அவர்களுக்குச் "சிலேடைக்கவிரத்னம்" என்ற சிறப்புப்பெயரையும், உரை ஆசிரியர் திரு வ. சிவராஜசிங்கம் அவர்களுக்கு உரைவிற்பன்னர் என்ற சிறப்புப் பெயரையும் வழங்கி வாழ்த்துவோமாக" எனக் குறிப்பிடுகிருர் பண்டிதமணி.

உலகிலே ஏதேதோ மாறுதல்கள் ஏற்பட்டும் கரவையில், யாழ்ப்பாணத்தின் பழைய தமிழ்ப்பண்புகள் பாதுகாக்கப் பட்டுவருவதுஅப்பிள்ளையாரின் அருளேயாகும்.

அவரே இந்த நூலை தன்னைக் கருவியாகக்கொண்டு ஆக்கி அளித்திருப்பதாகப் பண்புடன் கூறுகிருர் ஆசிரியர் கணபதிப்பிள்ளை.

வெளியீட்டுவிழா பழைய பண்புடன் சிறப்பாக நடைபெற்றது.

0 0 0

பயனுள்ள பல நல்லவிஷயங்களடங்கிய வாடாமலர் மாதாமாதம் யாழ்ப்பாணத்தில் மலர்கின்றது. "மில்க்வைற்செய்தி" என்ற பெயரில், அந்ததொழில் ஸ்தாபனத்தார் இலவசமாக வெளியிட்டுவரும் அழகிய இம் மலர் வீட்டில் பத்திரமாக வைத்து ஒருபொக்கிஷம்போல் பயன்படுத்தத் தக்கதாகும்.

இம்மாதம் வெளியான மலரில், "வேம்பைப் பற்றிய ருசியான கதையும், தேவாரம், திருக்குறள், சிவானந்தசீலம், அருள்விருந்து, கீதை சொன்ன பாதை, நாட்டுப்பாடல், சித்த வைத்தியம், காந்தியடிகளின் வாழ்வில், பஞ்சதந்திரம், கோயில்கள், யோகாசனம், நாவலர் நன்மொழிகள், உடல் நலம், ராமகிருஷ்ணர், சிவானந்தர், யோகசுவாமிகளின் அருள் மொழிகள் முதலிய இன்னும் பல அரியவிஷயங்களைத் திரட்டித் தந்திருக்கிருர், கௌரவ ஆசிரியரும், காந்திய வழியில் நிற்பவருமான பெரியார் திரு. க. சி. குலரத்தினம் அவர்கள்.

மக்களுக்கு அரும்பணி ஆற்றும் இந்த இலவசமலரை நல்ல முறையில்வெளியிடுவது நன்றியுடன் போற்றத்தக்கதாகும்.

சிதம்பாம் ஆனித்திருமஞ்சனத்தையொட்டி ஸ்ரீலஸ்ரீ பரமாச்சாரிய சுவாமிகள், அவ்விடத்தில் விரிவுரையாற்றி, தரிசனம் செய்து. ஸ்ரீநடராஜப் பெருமானுக்கும் சிவகாமசுந்தரிக்கும் நடைபெற்ற ஆனித் திருமஞ்சன அபிஷேகப் பிரசாதம் கொண்டுவந்து நல்லைஆதீனத்தில் பூஜைமுகத்தில் வழங்கினர்கள்.

## ஜம்மு-காஷ்மீரில் இன்று சட்டசபைத்தேர்தல்:

# இரு நாட்களில் வாக்குப் பதிவு

ஸ்ரீநகர், ஜூன் 29

ஜம்மு-காஷ்மீர் சட்டசபைத் தேர்தல், நாளை வியாழக்கிழமை நடைபெறுகிறது. வாக்குப் பதிவு இரண்டு தினங்களுக்கு நடக்கும்.

நாளை நடைபெறும் தேர்தல் பற்றி பாரதப்பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் கருத்து வெளியிடுகையில், ஜம்முகாஷ்மீரில், சுதந்திரமான நியாயமான தேர்தல் நடைபெறும் என்றும் மக்கள் தங்களின் அச்சத்தை நீக்கிச் சுதந்திரமாக வாக்களிக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

கட்சிகளின் தேர்தல் பிரச்சாரம், நேற்று மாலையுடன் முடிவடைந்தது.

தேர்தல் ஏற்பாடுகளைக் கவனிக்கும் பொருட்டு தலைமைத் தேர்தல் கமிஷனர் ஸ்ரீநகருக்கு வந்துள்ளார்.

# 'ஜனதாகட்சியைத் தோல்விபெறச் செய்க!'

## மக்களுக்கு 'ஷேக்' கோரிக்கை

புதுடில்லி, ஜூன். 29

நடைபெறவிருக்கும் காஷ்மீர் சட்டசபைத்தேர்தலில்மக்கள், ஜனதா கட்சியை படுதோல்வியடையச்செய்யவேண்டும் என்று சுகவீனமுற்றிருக்கும் ஷேக்அப்துல்லா அறிக்கை விடுத்துள்ளார்.

''எமது தேசிய மாநாட்டுக் கட்சி தேசவிரோதக்கட்சி என திருவாளர்கள் சரண்சிங், ஜெகஜீவன்ராம் போன்ற அமைச்சர்களே பொறுப்பற்ற முறையில் பேசிவருவதால் மக்கள் நிதானமாக நடக்கவேண்டும்'' என்று கூறியுள்ளார்.

''என்னை அரசியலிலிருந்து ஒதுங்குமாறு ஜெகஜீவன்ராம கூறிவருகின்றார். ஆனல், ஜெகஜீவன்ராம், அரசியலிலிருந்து ஒதுங்குவாரானல் நானும் ஒதுங்குவேன்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (கெ)

## சீன-அமெரிக்க உறவுகள்

வாஷிங்டன், ஜூன் 29

சீன-அமெரிக்க உறவுகள் குறித்து கார்ட்டர் நிர்வாகம் இப்போது பரிசீலனைசெய்து வருகிறது.


உறவுகளில் நல்லமுன்னேற்றம் காணப்படுவதாகவும், தைவான் தொடர்பான, அமெரிக்க 'கடமை'யே முட்டுக்கட்டையாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## ஐ. தே. கட்சிக் கிளை

யாழ்ப்பாணம், வியாழன்

ஐக்கிய தேசியக் கட்சியின் வட்டுச்சிவன் கிளையின் 2 வது ஆண்டுப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் தலைவராக ச. கிருபைநாதனும், உப தலைவர் இ.கனகநாதனும், காரியதரிசியாக வி. பாக்கியநாதனும் உதவிக் காரியதரிசியாகக.முசச்சிதானந்தசிவமும் பொருளாளராக க.பிரேமகாந்தனும், 9 பேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.



வேலர்: மயிலர்...உன்னுடைய மகன் நடந்துபோக புளியமரம் நடந்தபோனமாதிரிக் கிடந்தது. சடை நல்லாப் புளியங்காய்பத்திப் போச்சு.

மயிலர்: அவசரப்படாதையுங்கோ தேர்தல் திருவிழா முடிய முடி இறக்கப்போறானும். தன்னுடைய வேட்பாளர் தோத்தால் மொட்டையடிக்கிறதெண்டு என்ரை தலைப்பிள்ளை பந்தயம்.

— சுந்தர்

# நக்ஸலைட் கைதிகள் விடுதலை

புதுடில்லி, ஜூன். 29

மேற்கு வங்காளத்தில் அரசைக் கைப்பற்றியுள்ள மார்க்சிஸ்ட் லெனின் கம்யூனிஸ்ட் கட்சி முதலமைச்சர் திரு. கர்பூருதாருர், கடந்த ஐந்து வருடகாலமாக சிறைவைக்கப்பட்டிருந்த சகல நக்ஸலைட் கைதிகளையும்விடுதலை செய்துள்ளார்.

மேற்குவங்கத்தின் சட்டசபையில் சிறைவைக்கப்பட்ட நக்ஸலைட் எம். எல். ஏ. ஆக போட்டியிட்ட திரு. பிஜய் கிருஷ்ணசவுக்கி, வங்க சட்ட சபை சபாநாயகராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் மீதுள்ள குற்றச்சாட்டுகளைப் பற்றி பீஹார்அரசாங்கம்விசாரணை செய்து கொண்டிருப்பதால், விடுதலை செய்யமுடியாதெனக் கூறியதை அடுத்து, மிதுனப்பூர்சிறையில் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டார்.

இவர் மீது சுமத்தப்பட்ட தேசவிரோதக் குற்றச்சாட்டுகளின் பேரில் விசாரணை நடைபெற்றுவருகிறது. (கெ)

## கனடா பத்திரிகையாளர் நிலை என்ன?

லண்டன், ஜூன் 29

உகண்டாவில் உள்ள தமது பத்திரிகையாளரை அனுப்பிவைக்குமாறு கனடிய அரசு உகண்டா அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஆனல் கனடிய பத்திரிகையாளர் உகண்டாவில் இல்லை என்று உகண்டா அதிகாரிகள் கனடிய அரசுக்கு அறிவித்துள்ளனர். [உ]

### மத்திய கிழக்கு நெருக்கடி:

# அதிபர் கார்ட்டருடன் இஸ்ரேல் பிரதமர் பேச்சு

டெல்-அவிவ் ஜூன் 29.

மத்திய கிழக்குப் பிரச்னை சம்பந்தமான மாநாட்டை ஜெனிவாவில் அக்டோபர் மாதம் நடத்த இஸ்ரேல் பிரதமர் விருப்பம் தெரிவித்துள்ளார்.

கைப்பற்றப்பட்ட அரபுப்பிரதேசங்களிலிருந்து இஸ்ரேல் வெளியேற வேண்டும் என்று அமெரிக்க அதிபர் கார்ட்டர் கோரியது குறித்து இஸ்ரேல் பிரதமர் உடனடியாக எக்கருத்தையும் வெளியிடவில்லை.

அதே நேரத்தில் அமெரிக்க அதிபருடன் இஸ்ரேல் பிரதமர் மத்தியகிழக்கு நெருக்கடி சம்பந்தமாகப் பேச்சு வார்த்தைகள் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### றொடீஷிய தாக்குதல்:

# இராணுவ உதவியை மொஸாம்பிக் கோருகிறது

## ஐ. நா. பாதுகாப்புச்சபை கூடியது

நியூயோர்க், ஜூன் 29

றொடீஷிய ஆக்கிரமிப்பை முறியடிக்க, அதிகமான அளவில் இராணுவ உதவிகள் வழங்கப்படவேண்டும் என்று மொஸாம்பிக், ஐக்கிய நாடுகள்பாதுகாப்புச் சபையைக் கேட்டுள்ளது.

மொஸாம்பிக்கில் றொடீஷிய துருப்புகள் அத்துமீறிப் பிரவேசித்து தாக்குதல்கள் நடத்தி வருவதாகவும் இது பற்றி நடவடிக்கை எடுக்க ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை உடனடியாகக் கூட்டப்பட வேண்டும் என்றும் மொஸாம்பிக் அதிபர் கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்து ஐ. நா. பாதுகாப்புச் சபை கூடியுள்ளது.

றொடீஷியத் தாக்குதல்களினல் ஒரு கோடி முப்பதுலட்சம் டாலர் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மொஸாம்பிக் தெரிவித்திருக்கிறது.

''றொடீஷிய ஆக்கிரமிப்பு, உலகப்போரையும் தூண்டிவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளது. பல நாடுகளின் இராணுவ உதவிகள் மூலமே றொடீஷிய ஆக்கிரமிப்பை முறியடிக்க முடியும்'' என்று மொஸாம்பிக் ஜனதிபதி அறிவித்துத்துள்ளார்.

### காமராஜர் நினைவுதினம்:

# கலைஞர் தலைமையில் சென்னையில் விழா!

## கண்ணதாசன் ஏற்பாடு

நாகபட்டினம், ஜூலை 29

அமரர் காமராஜரது நினைவு நாளை நாடுபூராவும் விரிவான முறையில் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகளைச் செய்யுமாறு, கவிஞர் கண்ணதாசன்வேண்டுகோள் விடுத்துள்ளார் நினைவு தினம் ஜூலைமாதம் 15 ந்திகதி முதல் தமிழ்நாட்டில் கொண்டாடப்பட விருக்கின்றது. இறுதித்தினமான 17-ந் திகதி சென்னை சீரணியரங்கில் டாக்டர் கலைஞர் மு. கருணநிதி தலைமையில்பொதுக் கூட்டம் நடைபெறும்.

கவிஞர் கண்ணதாசன் விடுத்த அறிக்கையொன்றில் ''தமிழ்நாட்டில், மறைந்த பெருந் தலைவர்களான, ராஜாஜி, அண்ணதுரை, காமராஜர் போன்றவர்களின் பின், தமிழ்த் தலைவர்களில் முதன்மையானவர் கலைஞர் கருணநிதிதான். எனவே இந்நினைவு தின வைபவத்திற்குத் தலைமை தாங்க தகுதிபடைத்தவர் கலைஞர் ஒருவரே. இவ்விழாவில் மேற்கொண்டு தகவல் பெற விரும்புபவர் என்னுடன் தொடர்புகொள்க'' என்று பணித்துள்ளார். (கெ)

# பதவியேற்பு வைபவத்தில்

## பத்திரிகை நிருபர்கள் குழப்பம்

புதுடில்லி, ஜூன். 29

ஹிமாலயப் பிரதேசமுதல்வராக திரு. சாந்தாகுமார் பதவியேற்ற வைபவத்தில், பெருங்குழப்பம்செய்து பத்திரிகையாளர்கள் வெளிநடப்பு செய்தனர்.

முதலமைச்சர் பதவியேற்பதற்கான வைபவஒழுங்குகளைக் கவனித்த குழு, வசதியற்ற இடத்தில் இவ்விழாவினை ஒழுங்குசெய்திருந்தது. இவ்விழாவில் பத்திரிகையாளர்களுக்கென ஒதுக்கப்பட்ட ஆசனங்களில், சட்டசபை உறுப்பினர்கள் அமர்ந்ததனல், பத்திரிகையாளர்கள் வெளிநடப்பு செய்தனராம். பெரும்கூச்சலும், குழப்பமும் இடம்பெற்றன.

இவ்வைபவத்தில் முன்னுள் முதலமைச்சர் கலந்துகொள்ளவில்லை. திரு சாந்தாகுமார் ஹிமாலயப் பிரதேச ஜனதா கட்சித் தலைவராவார். (கெ)

# "டாக்டர் ஏபிரகாம் ஒரு மக்கள் தொண்டன்"

யாழ்ப்பாணம், வியா.

''தனிமனிதனாகிய திரு. ஏபிரகாம் மற்றவர்கள்எவருமே செய்ய முடியாததை ஆட்சி மன்றம் சென்றுநமக்குச்செய்து தருவார்.''

இவ்வாறு யாழ்ப்பாணம் சுயேச்சை வேட்பாளர் டாக்டர் ஏ.எல்.ஏபிரகாமுக்கு ஆதரவாக ஈச்சமொட்டையில் திரு. கே. செபஸ்ரியாம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு.எஸ்.பாலசிங்கம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

''ஒன்றேகுலம் ஒருவனே தேவன் என்னும் கொள்கையைக் கொண்ட டாக்டர் ஏபிரகாமை அமரர் துரையப்பாவைப்போல் சேவை செய்யக் கூடிய ஒருவர் திரு.ஏபிரகாம் என்பதால்தான் எந்த நேரமும் மக்களைச் சந்திக்கவும், மக்கள் பிரச்னைகளைத் தீர்த்துவைக்கவும் கூடியவர் டாக்டர் ஏபிரகாம் மக்கள் நோய்தீர்க்கும் பணியில்ஈடுபட்டுள்ள டாக்டர் மக்களின் பசி,பட்டினி நோயையும் தீர்க்க முன்வந்திருக்கின்றார். இன் ஆதரவாளனாகிய நான் ஆதரிக்கின்றேன் என்றால் அமரர் துரையப்பா

[6ம் பக்கம் பார்க்க]

யாழ். புற்றுநோய் சிகிச்சைநிலைய ஸ்தாபித நிதிக்காக

## ஈழநாடு

### தேர்தல் 77 போட்டி பிரவேசப்பத்திரம்

### போட்டிக் கேள்விகள்

(1) கீழே தரப்படும் 23 தேர்தல் தொகுதிகளி லும் வெற்றிபெறும் வேட்பாளர்களைக் குறிப் பிடுக:-

| தொ.இல. | தொகுதி | வெற்றி பெறும் வேட்பாளர் |
|---|---|---|
| 79. | ஊர்காவற்றுறை | ........ |
| 80. | வட்டுக்கோட்டை | ........ |
| 81. | காங்கேசன்துறை | ........ |
| 82. | மானிப்பாய் | ........ |
| 83 | கோப்பாய் | ........ |
| 84. | உடுப்பிட்டி | ........ |
| 85. | பருத்தித்துறை | ........ |
| 86. | சாவகச்சேரி | ........ |
| 7. | நல்லூர் | ........ |
| 88 | யாழ்ப்பாணம் | ........ |
| 89. | கிளிநொச்சி | ........ |
| 90. | மன்னார் | ........ |
| 91. | முல்லைத்தீவு | ........ |
| 92. | வவுனியா | ........ |
| 94. | திருகோணமலை | ........ |
| 95. | மூதூர் | ........ |
| 96. | கல்குடா | ........ |
| 97. | மட்டக்களப்பு (1) | ........ |
| | (2) | ........ |
| 98. | பட்டிருப்பு | ........ |
| 100. | சம்மாந்துறை | ........ |
| 101. | கல்முனை | ........ |
| 102. | பொத்துவில் (1) | ........ |
| | (2) | ........ |
| 103. | புத்தளம் | ........ |

(2) மேற்கண்ட 23 தொகுதிகளிலும் மிக அதிக வாக்குகளைப் பெற்று வெற்றிபெறும் வேட்பாளர் யார்?

| தொ.இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| ........ | ........ | ........ |

(3) மேற்கண்ட 23 தொகுதிகளிலும் மிக அதிக பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றிபெறும் வேட்பாளர் யார்?

| தொ.இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| ........ | ........ | ........ |

(4) மேற்கூறிய 23 தொகுதிகளிலும் மிகக்குறைந்த பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்படும் வேட்பாளர் யார்?

| தொ. இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| ........ | ........ | ........ |

(5) பின்வரும் தொகுதிகளில் வரிசைக் கிரமமாக வரக்கூடிய முதல் மூன்று வேட்பாளர்களையும் குறிப் பிடுக.

| தொ.இல. | தொகுதி | | வேட்பாளர் |
|---|---|---|---|
| 79. | ஊர்காவற்றுறை | 1. | ........ |
| | | 2. | ........ |
| | | 3. | ........ |
| 84. | உடுப்பிட்டி | 1. | ........ |
| | | 2. | ........ |
| | | 3. | ........ |
| 85. | பருத்தித்துறை | 1. | ........ |
| | | 2. | ........ |
| | | 3. | ........ |
| 88. | யாழ்ப்பாணம் | 1. | ........ |
| | | 2. | ........ |
| | | 3. | ........ |
| 97. | மட்டக்களப்பு | 1. | ........ |
| | | 2. | ........ |
| | | 3. | ........ |

தபாற்கட்டளை/ காசுக்கட்டளை இல ........ ரூபா ........ இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. 'ஈழநாடு' ஞாயிறு வாரமலர்களிலும், புதன் கிழமைகளில் வரும் 'ஈழநாடு' தினசரியிலும் வெளியி டப்படும் 'ஈழநாடு தேர்தல்-77போட்டி' நிபந்தனைக ளுக்கும் அதன்நடுவர் குழு''வின் தீர்மானத்துக்கும்கட்டுப் படுகிறேன் என்று இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

பெயர்: ... ... ... ... ... ... ...

முகவரி: ... ... ... ... ... ... ... ... ...

திகதி ........

கையொப்பம்

குறிப்பு: (1) மட்டக்களப்பும் பொத்துவிலும் இரட்டை அங்கத்தவர் தொகுதிகளானதால் வாக்காள ருக்கு இருவாக்குகள் உண்டு. எனவே இத் தொகுதிகளின் வேட்பாளர்களுக்கு கிடைக் கும் வாக்குகளை சரிபாதியாகப் பிரித்துவரும் எண்ணிக்கையையே இப்போட்டியில் மற்றைய தொகுதிகளுடன்ஒப் பிடுவதற்கு எடுக்கப்பட வேண்டும்.

குறிப்பு; (2) மட்டக்களப்பு-பொத்துவில் தொகுதிகளில் இப்போட்டிக்கான அதிகப்படி வாக்குகளைக் கணிக்கும் முறை:-

முதலாவது 2வது அங்கத்தவர்களின் அதிகப்படிவாக் குகள் = அவரவர் வாக்குகளின் சரிபாதியிலிருந்து மூன்றாவ தாக வந்த வேட்பாளரின் சரிபாதி வாக்குகளைக் கழித்து வரும் தொகைகளாகும். போட்டி முடிவுதிகதி 20-7-1977.

## உள்ளூரில் விதைகிழங்கு உற்பத்தி

கொழும்பு, புதன்

நாட்டுக்குத் தேவையான 6 500 தொன் விதை உருளைக் கிழங்கையும் உள்நாட்டிலேயே உற்பத்திசெய்ய விவசாயத் திணைக்களம் தீர்மானித்துள் ளது.

உள்ளூரில் மலைநாட்டில் உள்ள விவசாயப்பண்ணைகளில் இந்த விதை உருளைக் கிழங்கு உற்பத்திசெய் யப்படவுள்ளது.

கடந்தவருடம் 1,500 தொன் விதைகிழங்கு மட்டுமே உள் ளூரில் உற்பத்தி செய்யப்பட் டது. (இ)

— —

## மறவன்புலவு கொலை: சந்தேகநபரை கைது செய்ய வாரண்ட்!

சாவகச்சேரி, புதன்

மறவுன்புலவு கள்ளுத் தவற ணைக்கு சமீபத்தில் நடந்த கொலை தொடர்பாக கோயி லாக்கண்டியைச் சேர்ந்த சந்தேக நபரான எம். துரைச் சாமியை கைதுசெய்யும்படி மரணவிசாரணை அதிகாரி வாரண்ட் பிறப்பித்தார்.

தச்சன்தோப்பைச் சேர்ந்த க. ஐயாத்துரை (வயது 32) என்பவர் இச்சம்பவத்திற் கொலையுண்டவராவர். சட் டத்தரணியும் மரணவிசாரணை அதிகாரியுமான திரு. வி.பால கிருஷ்ணன் மரணவிசாரணை நடத்தினார். (க)

## மன்னாரில் சர்வோதயப்பணி

மன்னார், புதன்

மன்னார் மாவட்டத்தில் சர்வோதயஸ்தாபனம் அதன் மன்னார் அமைப்பாளர் செல்வி ஜனகா சிவகுரு மூலமாக மாவட்டத்தில் பல நற்பணி களை ஆற்றி வருகிறது.

பாலர் ஆரம்பப் பாடசாலை கள் வங்காலை, தேவன்பிட்டி, இலுப்பைக்கடவை, சிலாவத் துறை, அரிப்பு ஆகிய இடங் களில் தொடக்கப்பட்டுள்ளன. இலவச பால்மா விநியோக மும் நடைபெற்று வருகிறது.

தலைமன்னாரில் தாயகம் செல்லும் மலையகத் தோட் டத்தொழிலாளர்களுக்கு மதிய உணவாக சோறும், காலை, மாலை நேரங்களில் ஆகாரமும் வழங்குகிறது.

செல்வி ஜனகா சிவகுரு இரு வருடங்களாகப் பணி யாற்றி வருகிறார்.

மன்னாரிலிருந்து இம்மாதம் முப்பது பேர் சர்வோதயப் பயிற்சிக்காக அனுப்பப் பட்டுள்ளனர்.

இச்சேவைகள் தங்கு தடை யின்றி நடைபெற வாகன உதவி மற்றும் உதவிகளை மன் னார் உதவி அரசாங்க அதிபர், சிலாவத்துறை அரசாங்க அதிபர், மற்றும் பல பகுதிகளிலுமுள்ள கிறிஸ்தவ குருமார்களும் சகோதரிகளும் வழங்கி வரு கின்றனர். (அ)

## காந்தி மாதர்சங்க நிர்வாகிகள்

அரியாலை, புதன்

அரியாலை காந்தி சனசமூக நிலைய மாதர் சங்கத்தின் வரு டாந்தக்கூட்டம் தலைவி திருமதி அ. இரத்தினசிங்கம் தலைமை யில் நடைபெற்றது.

புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப் பட்டனர். தலைவி: திருமதி அ. இரத்தினசிங்கம், உப தலைவி; திருமதி தே. இராம லிங்கம், செயலாளர்: திருமதி சி ஜீவானந்தம், உபசெயலா ளர்: திருமதி எ. மதியாபர ணம், பொருளாளர்: செல்வி அ. ஐயம்பிள்ளை.

நிர்வாகசபை உறுப்பினர்க ளாக திருமதிகள்: யே. டானி யல், க. சண்முகநாதன், பே. கனகரத்தினம், பு. தில்லை யம்பலம். ச. குழந்தைவிநா யகம், செல்வி ச. தாதாபிள்ளை ஆகியோரும், கணக்காளராக செல்வி கோ. டானியலும் தெரிவுசெய்யப்பட்டனர். (ஈ)

## "உரிமைகளைவென்றெடுக்க இடதுசாரி ஐக்கிய முன்னணி வழியில் செல்வது எமதுகடமை"

### — காவலூர் சமசமாஜ வேட்பாளர்

யாழ்ப்பாணம், வியா.

''தென் னிலங்கையிலுள்ள ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தமது உடல்,பொருள்,ஆவியை அர்ப்பணித்தாவது சோஷலிச த்தைஅடைய முயன்றுகொண் டிருக்கிறார்கள். இடதுசாரி ஐக்கிய முன்னணிதான் இலங் கையில் யதார்த்த பூர்வமான சோஷலிச இலக்கை அடை யக்கூடிய இயக்கமென்பதை உணர்ந்து இளைஞர்கள் செயல் பட்டுவருகின்றார்கள். இதை தினமும் காண்கின்ற ஐக்கிய தேசியக்கட்சியும், இளைஞர் களை திசை திருப்புவதற்காக புதுமையான சோஷலிசம் பேசுகிறது''

இவ்வாறு காவலூர்த் தொகுதிசமசமாஜக்கட்சி வேட் பாளர் திரு. கே. கனகரத் தினம் குறிப்பிட்டார்.

ஊர்காவற்றுறை பாலாவி வீதியில் திரு. த. ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற கருத் தரங்கில் திரு. கனகரத்தினம் மேலும் பேசுகையில் கூறியதா வது:-

நாம் பேசுவதுபோல் உரிமை பெறமுடியாது. இந்த நாட் டில் உண்மையான சோஷலி சம் மலர்ந்தால் மட்டும் எம துரிமையைப் பெறமுடியும்.''

அவர் தொடர்ந்து பேசுகை ''இந்தநாட்டின் அதிவிவேக மிக்க சிங்களத்தலைவர்களா கிய திரு. பீட்டர்கெனமன், கலாநிதி, என்.எம். பெரேரா, திரு. சுபசிங்கா போன்றவர் கள் தமது அரசியல் லாபத் தையும் துறந்து, தமிழனுக்கு பிரதேச சுயாட்சி வழங்கவும் தமது தேர்தல் விஞ்ஞாபனத் தில் விளக்கியுள்ளனர்.

''தமிழினத்தின் உரிமை களை வென்றெடுக்க இடதுசாரி ஐக்கிய முன்னணியின் வழி யில் செல்வது எமது கடமை யாகும்''.

திரு. பா.செபஸ்ரின் உட்பட மற்றும் பலரும் உரையாற்றி னர். [கெ-இ]

## "அரசியல் சுதந்திரமுள்ள ஆசிரியர்கள் அரசியலில் ஈடுபடுவது நியாயமானதே"

கிளிநொச்சி, புதன்

''ஆசிரியர்கள் பெரும் மகோன்னத சேவையைச் செய்பவர்கள். எதிர் கால சிறார்களை வளம்படுத்தி புதிய சமுதாயத்தை உருவாக்குபவர் கள். ஒரு புதிய யுகத்தின் அத்திபாரம் ஆசிரியர்களே. மாணவர்களைப் பல்துறை வல்லுநராக்குபவர்களும் ஆசிரி யர்களே. புதிய சகாப்தத்தின் சிற்பியான ஆசிரிய உலகம் இன்று இலங்கை வாழ் தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் அரசியலில் ஏன் ஈடுபடக் கூடாது. அரசியல் சுதந்திரம் உள்ள இன்றைய காலகட் டத்தில் ஆசிரியர் அரசியலில் ஈடுபடுவது சாலவும் பொருத்த மானதே.''

மேற்கண்டவாறு அகில இலங்கை ஆசிரிய சங்க கிளி நொச்சிக்கிளை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருக் கிறது.

இவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது;

''இன்றைய அரசியல் யாப்பு தமிழ் மக்களுக்குப் பெரும் பாதகமானது.

''தரப்படுத்தல் மூலமாகத் தமிழ் மாணவர்களின் உயர் படிப்பு அதாவது பல்கலைக் கழகப் படிப்பு தடைப்பட்டுள் ளது.

''தமிழர் வேலைவாய்ப்பு பிர தேச அபிவிருத்தி என்பனவற் றுல் புறக்கணிப்பு.

''திட்டமிட்ட குடியேற் றத்தால் எமது பிரதேசம் பறி போகின்றது.

''தமிழ், முஸ்லிம் மக்களின் உடைமைகள், உயிர்கள் பறிக் கப்படுகின்றன.

எனவேதான் அறிவு புகட் டும் ஆசிரிய உலகமும் இக் கொடுமைகளுக்கு எதிராக அர சியல் சுதந்திரத்துடன் தேர் தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள் ளது.'' (அ)

## காங்கேசன் கூட்டணிக் காரியாலய பொலிஸ் தாக்குதல் வழக்கு

மாவிட்டபுரம், புதன்

காங்கேசன்துறை தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளைக் காரியாலய பொலிஸ்தாக்கு தல் வழக்கில் எதிரிதரப்பினா ரால் கிளப்பப்பட்ட சட்டப் பிரச்னையயடுத்து வழக்கு ஆகஸ்ட் 8-ம் திகதிக்கு ஒத்திப் போடப்பட்டது.

காங்கேசன்துறைத் தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளைக் காரியாலயத்தினுள் அத்து மீறிப் பிரவேசித்து அங்கிருந்த பொருட்களை அடித்து உடைத் துச் சேதம் விளைவித்ததாக வும், இரத்தினப்பிள்ளை பண் டரிநாதனைத் தாக்கிக்காயம் விளைவித்ததாகவும் குற்றம் சாட்டி காங்கேசன்துறைப் பொலிசைச் சேர்ந்த ஹேம ரன்ன, சேனாதீரா ஆகியோர் மீது மல்லாகம் நீதிமன்றத் தில் இவ் வழக்குத் தொடரப் பட்டுள்ளது.

இவ் வழக்கு நீதிபதி திரு. எம். யேசுரத்தினம் முன் னிலையில்விசாரணைக்குஎடுத்துக் கொள்ளப்பட்டசமயம் எதிரி கள்சார்பில் ஆஜரான சட்டத் தரணி ஆர். ஜே. செல்வரத் தினம் இவ் வழக்குச் சம்பந்த மாக நடைபெற்ற அடை யாள அணிவகுப்பு, பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் அதிப ரால் நடாத்தப்பட்டது சட்ட விரோதமானதென்றும் ஒரு நீதிமன்றத்திலோ, அல்லது நீதிபதியின் அனுமதியுடன் பொலிஸ்நிலையத்தில் பதில் நீதிபதி யாலோ தான் இது நடத்தப்பட்டிருக்க வேண்டு மென்றும் அப்படி நடை பெறுமையால் இது சட்டத் திற்கு விரோதமான அணி வகுப்பாகும் என்றும் சட்டப்பிரச்னை யொன்றைக் கிளப்பினார்.

நீதிபதி இதுபற்றி பின்னர் ஆராய்வதாகக் கூறி வழக்கை ஆகஸ்ட் 8-ம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (அ)

From Tomorrow
**RIO** (Jaffna) Daily 4 Shows
Daily 10-30, 4-45, 7-15, 9-45 p.m.
DANIEL DEFOE'S
Immortal Classic
ROBINSON CRUSOE
(Family Entertainment)

**சாந்தி** யாழ். நகர் போன்; 7642
நாளை 1-7-77முதல்
காட்சியளிக்கிறது
10-30, 2-30, 6-30, 9-45
★ சிவாஜி ★ சரோஜாதேவி
எம். ஆர். ராதா ரங்கராவ்
கலைஞர் மு. கருணாநிதியின்
**இருவர் உள்ளம்**
(புதிய பிரதி)

**வெலிங்டன்** [யாழ். நகர்]
ஜெய்சங்கர் — வாணிஸ்ரீ நடித்த
தினசரி 3, சனி ஞாயிறு 4 காட்சிகள்
**தபால்காரன் தங்கை**

**லிடோ** போன்: 7693 (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
(புதிய பிரதி)
ஜெய்சங்கர் நடித்த
**வல்லவன் ஒருவன்**

**REGAL** (JAFFNA) CROWDED 2nd WEEK
Daily: 4-45, 7-00 & 9-30 p. m.
Dicing with Danger, Pulse Tingling Thrill - A-Minute Adventure in a Devil May care world of Cavier, Rubbling Champagne, Eye- CatchingGirls... and Ruthless Crooks.
Tony Curtis - Roger Moore - Susan George
in
"Mission Monte Carlo"
(Color) (Action Packed Film)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவராம், கீதாஞ்சலி, தர்மலிங்கம், ஸ்ரீதேவி
மற்றும் பலர் திறம்பட நடித்த்
ஈழத்திரையோவியம்
ஜெயேந்திரா மூவிஸ்
**காத்திருப்பேன் உனக்காக**

**மனோகரா** [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி (இருவேடங்களில்) நடித்த
**மனிதனும் தெய்வமாகலாம்**

**ராஜா** (யாழ்நகர்) போன்: 7180
54-வது தினம்
தினசரி 4 காட்சிகள்
தேவரின்
**திருவருள்**
(ஈஸ்ட்மன் கலர்)
குறிப்பு:- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

**போயா தினத்தையொட்டி இன்றுசினிமாக்காட்சி இல்லை**

இலங்கை தமிழ்த்திரைப்படத்துறைக்கு

# 'ஒளிமயமான எதிர்கால முண்டு'

## கலையரசு நம்பிக்கை

யாழ்ப்பாணம், வியா. 'மேடை நாடகங்களின் வளர்ச்சியே இன்று சினிமாத் துறையின் வளர்ச்சியாகும் என்று ஈழத்திரைப்படத் தயாரிப்பான "காத்திருப்பேன் உனக்காக" படத்தொடக்க விழாவில் கலையரசு சொர்ணலிங்கம் பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து தமதுரையில், "ஈழத்தில் தயாரிக்கப்பட்டுத் திரையிடப்பட்ட பதினைந்தாவது திரைப்படமான இப்படம் ஈழத்திரைப்பட வளர்ச்சியின் ஒருமைல் கல்லாகும். இலங்கையில் சமீப காலமாக சினிமாத்துறையிலே ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது. வெறும் கவர்ச்சியையும், ஆபாசங்களையுங் கொண்டு படத்தை ஓடி முடித்து விடலாம் என்ற கருத்துக்கு முற்றிலும் மாறுபட்ட வகையில் இப்படம் தயாரிக்கப்பட்டிருப்பது வரவேற்கக் கூடிய அம்சமாகும்.

"இந்தியத் திரைப்படங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கக் கூடிய அளவிற்கு இப்படத்தின் வளர்ச்சி அமைந்திருப்பது இத்துறையில் எமக்கு நல்ல ஒளிமயமான எதிர்காலம் உண்டு. என்பதைப் புலப்படுத்துகிறது. தயாரிப்பாளர் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது கதையும் வசனமுமாகும். வசனங்கள் விளங்கத் தக்கதாயும், கதைபொருத்தமானதாகவும் இருக்கவேண்டும். நடிகர்கள் முகபாவத்தாலும் அங்க அசைவுகளாலும் பாத்திரத்தை விளங்க வைக்க வேண்டும். எத்தனை சிரமங்கள் இருந்தாலும் முதலில் சகலதுறைகளிலும் ஒத்திசை பார்க்கவேண்டும், பின்னரே படம் எடுக்கவேண்டும். தயாரிப்பாளர், இயக்குநர், நடிகர்கள் இன்னும் இதில் சேர்ந்தவர்கள் யாவரும் ஒத்துழைத்துப்படம் வெற்றி கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தோடு ஈடுபடவேண்டும். தனியொருவர் பெயர் சம்பாதிக்கவேண்டும் என்ற எண்ணத்தைக் கைவிட்டுச் சகலரின் வெற்றிக்காகவும் உழைக்கவேண்டும். அதுதான் படத்தின் வெற்றி. அத்தகையதொரு வெற்றியை இப்படத்தில் நாம் காண முடிகிறது." (கா—அ)

## த. வி. கூ.

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மேலும் இ. தொ. கா. பிரதிநிதித்துவப்படுத்தும் இந்திய வம்சாவளி மக்கள் வடக்கு. கிழக்கு மாகாணங்களுக்கு வெளியேதான் வாழ்கிறார்கள். அவர்களிலும் ஆறு லட்சம் பேர் இந்தியாவுக்குப் போய் விடக்கூடியவர்கள், நான்குலட்சம் பேர் இலங்கை குடியுரிமைக்காகக் காத்திருப்பவர்கள் அவர்களைத் தனிநாடுபோராட்டம் போன்ற காரியங்களில் ஈடுபடுத்த முடியாதென்றும் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

இந்தநிலையில் அவரை தலைவராகக்கொண்டு தனிநாடு கோரிக்கையை முன்வைத்து த. வி. கூ. போட்டியிடுவதுடன் இத்தேர்தலை ஒரு சர்வஜன வாக்கெடுப்பாக கருதும்படி கோருகிறது. என்னே விந்தை இது?' [உ[

3-வது வாரம்
**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி—விஜயா நடித்த
**தங்கப்பதக்கம்**

**வெஸ்லி** [மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர்— ஜெயலலிதா
**கணவன்**

## வரி விளம்பரம்

**தேவை**

2ம், 4ம், வகுப்புகளில் கற்கின்ற இரு சிறுவர்களுக்கு கிழமைநாட்களில் மாலை 6-30 தொடக்கம் 8-00 மணிவரை கவர்ச்சியுள்ள திறமையான முறையில் ஆங்கிலம் உட்பட எல்லாப்பாடங்களும் கற்க உதவும் ஆசிரியை தேவை. திறமைக்கு ஏற்றவேதனம் வழங்கப்படும். விபரங்களுக்கு:- 71/7, கோவில் வீதி, யாழ்ப்பாணம். 6559

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

# "தமிழரின்எதிர்காலத்துக்கு எம்மிடம் திட்டமுண்டு"

—யோகேந்திராதுரைசுவாமி

யாழ்ப்பாணம், வியாழன் "தேர்தலுக்காக வெறுஞ் சுலோகங்களை முன்வைத்து தீவுப்பகுதி மக்களை நான் ஏமாற்ற முன்வரவில்லை. தமிழ் மக்கள் இயக்கம், ஊர்காவற்றுறைத் தொகுதி மக்களுக்கு மட்டுமல்ல, இலங்கையில் வாழும் தமிழ் மக்களனைவரதும் எதிர்கால மேம்பாட்டுக்கான இலட்சியங்களை முன் வைத்துத்தான், அரசியலில் தனது பங்கைச் செலுத்த வந்திருக்கிறது. இந்த இலட்சியத்திற்காகவே அரசில் பெரிய பதவியை வகித்தநான் அதனைத்துறந்துவிட்டு, எனது இனத்திற்கு, மொழிக்கு கலாசாரத்திற்கு, மரபுவழி தாயகத்திற்கு சேவை செய்ய, பலவிதமான இன்னல்களையும் எதிர் நோக்கும் நிலையில் முன் வந்துள்ளேன். நான் தீவுப்பகுதி மகன் என்ற வகையில் தீவுப்பகுதி மக்கள் அனைடயும், சகல இன்ப துன்பங்களிலும் எனக்குப் பங்குண்டு. இதனையாராலும் மறுக்கமுடியாது" என்று தமிழ் மக்கள் இயக்கத் தலைவரும் ஊர்காவற்றுறை தொகுதி வேட்பாளருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி "நான் ஏன் பொதுத் தேர்தலில் போட்டியிடுகிறேன்" என்பதனை விளக்கி வேலணை மேற்கில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் பேசியதாவது: "தமிழ் மக்கள் இயக்கம் தனது குறுகிய நீண்டகாலத் திட்டங்களின் அடிப்படையில், தமிழினத்தின் இழந்த உரிமைகளைப் பெறுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடும் இத் திட்டங்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வசிக்கும், தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, இலங்கை முழுவதிலுமுள்ள முப்பத்தைந்து லட்ச தமிழ் மக்களுக்கும் நன்மைபயப்பனவாகும். எமது திட்டங்கள் நடைமுறை சாத்தியமற்ற, கற்பனாவாதச் சுலோகங்களல்ல, அவை நடைமுறைச் சாத்தியமும், அறிவுபூர்வமான அணுகு முறையுங் கொண்டு, செயற்படுத்தப்படும் போது தமிழ் மக்களின் சுதந்திரமான, பூரணத்துவமான வாழ்வுக்கு வழி செய்யும் இப்பொதுத்தேர்தல் எமக்கு அளிக்கப்படும் வாக்குகள், புதிய அரசியல் தலைமைக்கான இடத்தினைச் சிறப்பாக எடுத்துக் காட்டுவதாக அமையும்."

**விலை குறைப்பு**

**சித்திரகலா ஸ்ரூடியோ**

இல. 70, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

| அளவு | பிரதிகள் | பழைய சலார் | புதிய சலார் |
|---|---|---|---|
| 12''×10'' | 3 | 110-00 | 100-00 |
| 6½''×4¾'' | 3 | 35-00 | 31-50 |
| 3½''×5½'' | 3 | 14-00 | 12-50 |
| 2½''×3½'' | 3 | 7-00 | 6-25 |

6558

**"முக்கிய அறிவித்தல்"**

**'சாந்தி பிலிம்ஸ் லிமிட்டெட்'**

**யாழ்ப்பாணம்.**

திருவாளர்கள்:-
1. வேலுப்பிள்ளை தணிகாசலம் (தலைவர்)
2. சந்தியாப்பிள்ளை சவரிமுத்து (இயக்குனர்)
3. முகமது செய்யது அலாவுதீன் முகமதுராஜா (பங்குதாரர்)

ஆகிய முன்னவர் இருவரும் 25-ந் திகதி மே மாதத்தில் இருந்தும், பின்னவர் ஜூன் மாதம் 20-ந் திகதியிலிருந்தும் தங்கள் பதவியிலிருந்து சட்டரீதியாய் பங்குகளைத் திருப்பிப் பெற்று விலகிவிட்டார்கள் என்று இத்தால் அறியத்தருகின்றோம்!!

இவர்கள் இனிமேல் இக்கொம்பனியின் பெயரிலோ, சார்பிலோ செய்யும் எந்தவிதமான கொடுக்கல், வாங்கலுக்கும் நானோ, கொம்பனியோ பொறுப்பில்லை என்பதை அறியத்தருகின்றேன்!

இப்படிக்கு
**கணபதிப்பிள்ளை வீரசிங்கம்,**
நிர்வாக இயக்குனர்,
"சாந்தி பிலிம்ஸ் லிமிட்டெட்",
யாழ்ப்பாணம்.

6562

# ஈழநாடு
The EELANADU


## உரிமைகளை வழங்க உடனடி நடவடிக்கை

சங்கானை, புதன்

இலங்கை ஆசிரியர் சங்க வடபிரதேசக்கிளை தூது குழு ஒன்று கடந்த திங்கட்கிழமை வடமாநில கல்வி அதிபதி திரு.க.சிவானந்தனை சந்தித்து தமது வழங்கப்படாத உரிமைகள் பற்றி பேச்சுவார்த்தை நடாத்தியது.

பேச்சுவார்த்தையின் போது கல்விஅதிபதி, சில உரிமைகளை உடனடியாக அமுல் நடாத்துவதாகவும், சிலற்றை ஆலோசனை செய்து நடாத்துவதெனவும் உறுதியளித்தார்.

''எல்.பி.டி.சில்வா கமிஷன் சிபார்சுகளுக்கு அமைய ஆசிரியர்களின்பதவி, சம்பள உறுதிப்படுத்தற் கடிதங்களை ஒருமாதத்திற்குள்ளும், ஆசிரியர்களுக்கு இதுவரை காலமும் வழங்கப்படாதிருக்கும் பதவி நிலைகளுக்குரிய வேதனத்தையும், அவை தொடர்பான பாக்கிப்பணத்தையும் இரு மாதங்களுக்குள் வழங்குவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வது என்றும்; ஆசிரியர்களுக்குரிய லீவு விண்ணப்பப் படிவங்களுக்குப் பதிலாக லீவுகோரும் படிவங்களை ஏற்பதென்றும் அதற்கான சுற்றுநிருபத்தைத் தாம் விரைவில் அனுப்பி வைப்பது என்றும்; வடமாகாண ஆசிரியர் சங்கக் கல்விச்சபை கடந்த காலத்தில் நடாத்தி வந்த இயல், இசை, நடன, நாடகப் போட்டிகளை தொடர்ந்துநடாத்துவதற்குஆலோசனையின் பின் தெரிவிப்பதெனவும் கடன் வழங்கு சபை நடவடிக்கைகளை திறம் படஇயங்குமாறு பணிப்பது எனவும் கல்வி அதிபதி தெரிவித்தார்.

வடபிரதேச குழுத் தலைவர் திரு.ச.சுந்தரலிங்கம், பொதுச் செயலாளர் திரு.த.தேவராசா ஆகியோர் இக்குழுவில் இருந்தனர்.

### டாக்டர்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ரூர். நோயின் குணத்தை நாடிபிடித்து உணர்வதுபோல் மக்களது அன்றுட பிரச்னைகளையும் உணர்ந்த டாக்டரின் சேவை யாழ்ப்பாணம் தொகுதிவாக்காளருக்கு இன்றியமையாதது.'' (அ)

சங்கீத பூஷணம்

செல்வி. லீலாவதி சாந்தலிங்கத்தின்

## அந்தியேட்டி அழைப்பிதழ்



அன்னாரின் அந்தியேட்டிக் கிரிகைகள் (30-6-77) இன்று காலை 6 மணிக்கு கீரிமலையிலும் நண்பகல் 12 மணிக்கு வீட்டிலும்கிரிகைகள் நடைபெறும். நண்பர்களையும் உறவினர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

145/3 பிரப்பங்குளம் ஒழுங்கை
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். 6565

இங்ஙனம்
வி.கே. சாந்தலிங்கமும்,
குடும்பத்தினரும்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெண்கோவில் மேலைவீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna. Telegram Eelanaadu Telephone 389 Registered as a News paper in Sri Lanka.

## "தாதிப்பணி தெய்வீகப்பணி"

அரியாலை, புதன்

''தாதிப்பணி ஒருதெய்வீகப் பணியாகும். கடவுள் பக்தியுடனும் இரக்க சிந்தையுடனும் நோயாளிகளுடன் அன்பாகப் பழகும் இனிய சுபாவத்துடனும் இத்தொழிலை மேற்கொள்ளவேண்டும். நோயாளிகளுடன் பழகும் முறையின் மூலமே நோயாளிகளின் நோயைக்கண்டுபிடிப்பதுடன் அதற்கான சிகிச்சையும்செய்ய முடியும். இத்தொழிலை ஊதியத்துக்குரிய தொழிலாகக் கருதினால் இத்தொழிலில் வெற்றி பெறமுடியாது.''

இவ்வாறு காந்திசனசமூக நிலைய மாதர் சங்கத் தலைவி திருமதி அ. இரத்தினசிங்கம் அரியாலையில் யாழ்ப்பாண வை. டபிள்யூ. சீ. ஏ. மாதர் கழகத்தால் நடாத்தப்பட்டு வரும் குடும்பநலக்கல்வி நிலையத்தில் தாதியாகப்பணி புரிந்து மாற்றலாகிச்செல்லும் தாதி திருமதி கலா. தெய்வேந்திரத்துக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசாரக்கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

செயலாளர் திருமதி க. சண்முகநாதன் பேசுகையில் ''தனது கடமையை தனது கண்ணுகக் கொண்டு பணியாற்றி, இப்பகுதி மக்களின் நல்லாதரவையும் அன்பையும் பெற்றுக்கொண்டவராக திருமதி கலா. தெய்வேந்திரம் விளங்கினர்'' என்று குறிப்பிட்டார்.

இவரின் சேவைநலம் குறித்துப் பலர் பேசினர். மாதர் சங்கத்தின் சார்பில் அன்பளிப்புகளும் வழங்கப்பட்டன.

### பாரின் செல்கிறார் !

யாழ்ப்பாணம், வியா.

'மத்திய கிழக்கு நாடுகளில் நமதுநாட்டு இளைஞர்களுக்கு குறிப்பாக தொழில் நுட்ப அறிவுபெற்ற இளைஞர்களுக்கு நிறைய வேலைவாய்ப்பு உண்டு. அங்கு சென்றதும் நான் நமது இளைஞர்களுக்கு அங்கே வேலை வாய்ப்புகள் வழங்க முழுமுயற்சியும் செய்வேன்' என்று திரு. எஸ். கந்தசாமி நமது நிருபரிடம் தெரிவித்தார்.

நாளை மறுதினம் ம. கி. நாடுகளில் ஒன்ருன பாரினுக்கு பயணமாகும் இவர் அங்குள்ள பெரும் நிறுவனம் ஒன்றின் கணக்காளராக பதவியேற்கவிருக்கிருர்.

திரு. கந்தசாமி இளைப்பாறிய சுன்னுகம் ஸ்கந்தவரோதய கல்லூரி அதிபர் திரு. சி. சுப்பிரமணியத்தின் (ஒறேற்றர்) சிரேஷ்ட புதல்வரும், காலஞ் சென்ற பொன்னம்பலம் நவரத்தினத்தின் மருமகனும் ஆவார்.

## "தனிநாடு வேண்டுமென்பதை இத்தேர்தல் மூலம் காட்டுவோம்"

---ஆ துரைராஜசிங்கம்

யாழ்ப்பாணம், வியா.

''தமிழர் விடுதலைக் கூட்டணி ஓர் அரசியல் கட்சியல்ல. அது ஓர் சுதந்திர இயக்கம் என்பதை மக்கள் அறிய வேண்டும்.''

இவ்வாறு நல்லூர் வடக்கு பண்டாரக் குளத்தடியில் சிவசிதம்பரத்தை ஆதரித் நடைபெற்ற கூட்டத்தில் யாழ் கூட்டணி வேட்பாளர் சட்டத்தரணி வெ. யோகேஸ்வரன் பேசுகையில் கூறினார்.

இக்கூட்டத்திற்கு திரு. எஸ். அருணசலம் தலைமைவகித்தார்.

திரு யோகேஸ்வரன்தொடர்ந்து பேசுகையில் ''திரு. சிவசிதம்பரம் தமிழினத்தின் விடுதலைக்காக எந்தவொரு நடவடிக்கையிலும் இறங்காமல் இருக்கவில்லை. அப்படிப்பட்ட தொண்டனுக்கு நல்லூர்த் தொகுதி வாக்காளர்கள் செய்யும் கைம்மாறு அவரை அமோக வெற்றியடையச் செய்து ஆட்சிமன்றம் அனுப்புவதே'' என்று கூறினார்.

திரு. ஆ. துரைராஜசிங்கம் பேசுகையில், சென்ற அரசாங்கம் தமிழ் இனத்தின் உரிமைகளை மறுத்தது மட்டுமல்லாது பொருளாதாரத்திலும் பெரும் குறையைச் செய்துள்ளது. நமது இனம் சிங்கள அரசுக்குக்கீழ் அடிமைப்பட்டு வாழாமல் சுதந்திரமாக வாழுவதற்கு தனிநாடு வேண்டும் என்பதை நாம் இத் தேர்தல் மூலம் எடுத்துக்காட்ட வேண்டும்'' என்று கூறினார்.

நல்லூர்த்தொகுதி கூட்டணி வேட்பாளர் திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில், நாங்கள் பெரும் பலம் வாய்ந்த அணியாக ஆட்சிமன்றம் சென்ருல் எங்களது பிரச்னைகளை உலகத்திற்கு மிகத்தெளிவாகக் காட்ட முடியும் என்ருர்.

''நான்வேறுருதொகுதியில் வாழ்ந்தவனென்ருலும் தொடர்ந்தும் நல்லூர்த் தொகுதியிலே நல்லூர் வாழ் மக்களுக்காக தொண்டாற்றுவேன். இத் தேர்தலை சாதாரண தேர்தலெனக் கருதாமல் 'தமிழ் ஈழ' மலர்ச்சிக்கான தேர்தல் என்பதை உணர வேண்டும்'' என்றும் திரு. சிவசிதம்பரம்கூறினர். (கு-அ)

[அமரர் வைத்தியகலாநிதி க. சி. சண்முகரத்தினம் அவர்களின் பதினெராவது நினைவு தினம் இன்ருகும்.]

## ஜீவித ரத்தினமே!

- கவிஞர் அரியாலையூர் வே. ஐயாத்துரை -

தண்மை நிறைந்து பொலிந்து விளங்கிய
சண்முக ரத்தினமே — தமிழ்
சார்ந்து பரந்து விளைந்து மலிந்தநல்
சண்முக ரத்தினமே!
திண்மை நிறைந்து சிறந்து விளங்கிய
சித்தவ யித்தியரே — கலை
சேர்ந்து பரந்து விளைந்து மிளிர்ந்தநல்
ஜீவித ரத்தினமே!
அன்பு மலர்ந்த பணிப்பல மேவிய
ஆகம ரத்தினமே — உயர்
ஆக்க நிறைநெறி பூக்குமு யர்செயல்
ஆண்டவி ரத்தினமே!
தேசம றிந்திடு மீழ நாடுஎனும்
செய்தித் திலகமதை — நல்ல
நேச மாகவே நீட்டிவி ரித்தநம்
நேரா ரிரத்தினமே!
வண்ணை வளர்சிவ வாச னருள்தனை
வாங்கிய ரத்தினமே — பல
கண்ணை விழித்திடக் காரிய மாற்றிய
கவிஞ ரிரத்தினமே!
தாயி னருங்குணச் சால்பு நிறைந்திடும்
சண்முக ரத்தினமே — கொடும்
நோயை நுடக்கிட நுண்மை துலங்கிய
நூலறி ரத்தினமே!
ஆய கவிப்பலம் மேவி விளங்கிடு
ஆயுள் வேதமதையே — நல்ல
தூய முறைப்படி ஆவி நயப்படச்
சொல்லிய ரத்தினமே!

"தமிழர் விடுதலைக் கூட்டணி

## முரண்பாடான நிலையால் மக்களை குழப்புவது ஏன்?"

--சிவ ஸ்ரீதரன்

யாழ்ப்பாணம், வியாழன்

'தமிழர்விடுதலைக் கூட்டணியின் வேலைத்திட்டங்களில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் பங்கு என்ன என்பது தெளிவுபடுத்தப்படாத நிலையில்கூட்டணியின் தலைவராகத்தாம் பெயரளவில் மட்டுமே இருக்கமுடியுமே தவிர ஆக்க பூர்வமாக செயல்படக்கூடியதாக இருக்காதுஎன்றுஇ.தொ.கா.தலைவர்திரு.எஸ்.தொண்டமான் கூறியுள்ளார் த. வி. கூட்டணியின் தலைவர் இவரே என்று இதேவேளைமட்டுநகரில் கவிஞர் காசி ஆனந்தன் அறிவித்துள்ளார். இவ்விதம் முரண்பாடான நிலையை ஏற்படுத்தி த.வி. கூட்டணி தமிழ்மக்களை குழப்புவது ஏன்?'

இவ்வாறு அளவெட்டி கும்பளையில் திரு. எஸ். விலவராசா தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் பேசுகையில் காங்கேசன்துறை தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் சட்டத்தரணி திரு சிவ.சிறீதரன் வினவினார்.

திரு. சிறீதரன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:- ''வட்டுக்கோட்டையில் நடைபெற்ற த.வி.கூ. மாநாட்டில் எடுக்கப்பட்ட தனிநாடு தீர்மானத்தைப் பற்றி அந்நேரம் மணில்லாவில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் கலந்துகொண்டுவிட்டு திரும்பிய திரு. தொண்டமான் மேற்கண்ட கருத்தை கொழும்பில் வைத்துக் கூறியுள்ளார். இதனை ஆதாரபூர்வமாக நிரூபிக்க என்னால் முடியும். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று கூப்பாடுபோடுவோர் இதற்கு என்ன பதில் சொல்லப்போகிருர்கள்? இதே நேரம் திரு. தொண்டமான்

[5ம் பக்கம் பார்க்க]

### இன்று

யாழ்ப்பாணம், வியா.

இன்று நல்லூர் திவ்விய ஜீவன சபையினரால் நடாத்தப்படும் பூரணை வைபவ நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இவ்வைபவங்களையொட்டி, மலேசியாவிலிருந்து இங்கு வருகை தந்த சுவாமிஸ்ரீ பிரணவானந்தமகராஜ், ஆத்மஜோதி முத்தையா ஆகியோர் அருளுரை வழங்குவார்கள் பகல் அன்னதானமும் இடம்பெறும். (கெ-உ)

### தமிழ் ஈழக்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமோகமான வெற்றிபெற்ருர் ஆனுல் அதிலும் ஆட்சியாளர் திருப்தியடையவில்லை அமெரிக்கப் பத்திரிகைகள், தமிழர் சுதந்திரத் தமிழ ஈழக் கோரிக்கையை நிராகரித்து விட்டனர் என்று தலையங்கம் தீட்டின. ஆகவே இன்றைய தேர்தல் தமிழனைப் பொறுத்தவரையில் மட்டுமல்ல, அகில உலகஅரங்கின் கவனத்தையே ஈர்த்துள்ள ஒரு சர்வஜன வாக்கெடுப்பாக அமைந்துள்ளது.''